**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110291

1. District : மாவட்டம் KARUR  PS: காவல்நிலையம் V&AC  Year: ஆண்டு 2020  FIR No.: மு.த.அ. எண் 03/2020  Date: நாள் 20.5.2020

2. (i) Act சட்டம்:  Sections பிரிவுகள்: 7 and 13(2), r/w 13(1)(d) of P.C Act 1988.
   (ii) Act சட்டம்: P.C. Act 1988.  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 02.5.18  Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.2.2020  Time : நேரம் 11.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 20.5.2020  Time : நேரம் 12.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Written (Typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Pasupathipalayam P.S. Karur Dt 6 Km, East.
   Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி —
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. REKHA,  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் N. VIJAYA KUMAR
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 15.7.76  (d) Nationality : நாட்டினம் INDIAN  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் -  Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் INSPECTOR OF POLICE  (g) Address : முகவரி VIGILANCE AND ANTI CORRUPTION DETACHMENT, KARUR.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tr. NEPOLEON, SUB-INSPECTOR OF POLICE Pasupathipalayam P.S, Karur Dt
   2. Tr. Muruganantham, Gr I PC 1852 Pasupathipalayam P.S Karur Dt

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   Based on the findings of PE 191/2018/POL/KAR/. This case was registered after getting opinion from Law officer. Hence No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Typed contents in page no 3 to 6 is enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. A.Annamalai Rank ....DSP.......... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...Vd Ae.....Karur............on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 20.5.20

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 20.5.2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.5.2020 at 14.00hrs

Name: பெயர் ...M.REKHA,
Rank: நிலை .....................No. எண் ..........
INSPECTOR OF POLICE
Vd Ae, Karur

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| எதிரிகள்<br>1. நெப்போலியன்,<br>உதவி ஆய்வாளர்,<br>பசுபதிபாளையம் காவல் நிலையம்,<br>கரூர் மாவட்டம்.<br><br>2. முருகானந்தம்,<br>முதல் நிலை காவலர் எண்.1852,<br>பசுபதிபாளையம் காவல் நிலையம்,<br>கரூர் மாவட்டம். | சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக நமுனா எண். PE 191/2018/POL/KAR, நாள்: 17.02.2020 மூலம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய கிடைக்கப் பெற்ற உத்தரவின் பேரில் இன்று 20.05.2020 ஆம் தேதி 12.15 மணிக்கு கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 03/2020 பிரிவுகள் 7 மற்றும் 13(2) r/w 13(1)(d) of P.C Act 1988 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன் தகவல்கள் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

கோவிந்தன், த/பெ.கணேசன், அம்மன் உணவகம், முல்லை நகர், பெரிய ஆண்டிபாளையம் திருப்பூர் என்பவரின் 07.05.2018 நாளிட்ட மனு சம்மந்தமாக சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரக உத்தரவுபடி ஒரு முதல் கட்ட விசாரணை PE.191/2018/POL/KAR மேற்கொள்ளப்பட்டது. இவ்விசாரணையில் கீழ்கண்ட விபரங்கள் தெரியவருகின்றன.

குற்ற அலுவலர் திரு.நெப்போலியன் 10.02.2017 முதல் 17.06.2018 வரை உதவி ஆய்வாளராக பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்துள்ளார். குற்ற அலுவலர் திரு.முருகானந்தம் மு.நிகா.எண்.1852 என்பவர் 10.07.2017 முதல் இதுநாள் வரை தொடர்ந்து பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார். எனவே எதிரிகள் இருவரும் 1988 ம் வருட ஊழல் தடுப்பு சட்டம், பிரிவு 2(C) படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

மார்ஜினில் குறிப்பிடப்பட்டுள்ள எதிரிகள் நெப்போலியன் மற்றும் முருகானந்தம் ஆகியோர் முறையே உதவி ஆய்வாளராகவும், முதல் நிலை காவலராகவும் பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் பணியாற்றிய போது, அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த த.கா.1143 லோகநாதன் என்பவருடன் தனி அலுவலாக பசுபதிபாளையம் காவல் நிலைய குற்ற எண். 142/18 u/s 457, 380 IPC வழக்கில் காவல் துணை கண்காணிப்பாளர், நகர உட்கோட்டம் கரூர் ஆகியோர்களின் வாய்மொழி உத்தரவுபடி தனி அலுவலாக

நியமிக்கப்பட்டிருந்துள்ளார். அதன் பேரில் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்ததில் கீழ்கண்ட சம்பவங்கள் நடந்துள்ளது தெரியவருகிறது.

குற்ற அலுவலர்கள் இருவரும் தங்களது பணிக்காலத்தில் பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து போது காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.கும்மராஜா மற்றும் காவல் ஆய்வாளர் திரு.K.சந்திரசேகரன் ஆகியோர்களின் வாய்மொழி உத்தரவின் பேரில் பசுபதிபாளையம் காவல் நிலை குற்ற எண்.142/2018 U/s 457, 380 IPC வழக்கில் தனி அலுவலாக நியமிக்கப்பட்டிருந்தனர். அதன் பேரில் மேற்படி எதிரிகள் மேற்படி வழக்கின் தனி அலுவலாக த.கா. லோகநாதனுடன் சேர்ந்து எதிரிகள் கடந்த 02.05.2018 ஆம் தேதி திருப்பூர் குமரன் கல்லூரி அருகில் உள்ள மனுதாரர் திரு.கோவிந்தன் த/பெ.கணேசன் என்பவருக்கு சொந்தமான அக்ஷயா இண்டஸ்ட்ரீஸ் என்ற வெல்டிங் ஒர்க்ஷாப்பில் இருந்த, மனுதாரரை, காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் பசுபதிபாளையம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் ஆகியோர்கள் விசாரணைக்கு அழைத்து வரச் சொன்னதாகக் கூறி, கரூர் பசுபதிபாளையம் காவல் நிலையத்திற்கு 02.05.2018 ஆம் தேதி மாலை சுமார் 03.00 மணிக்கு அழைத்து வந்துள்ளனர் என்பது சாட்சிகள் விசாரணையின் மூலம் தெரியவருகிறது.

மேலும் அன்றைய தினம் மாலை சுமார் 05.30 மணியளவில் மனுதாரரின் மனைவி திருமதி.அனிதா, மைத்துனர் திரு.சசிக்குமார், வழக்கறிஞர் திரு.ரவிச்சந்திரன் மற்றும் மனுதாரரின் அக்ஷயா இண்டஸ்ட்ரீஸில் பணிபுரியும் ஊழியர் திரு.சீனிவாசன் ஆகியோர்கள் மனுதாரர் கோவிந்தனுக்காக பசுபதிபாளையம் காவல் நிலையம் வந்துள்ளது தெரிய வருகிறது. அதன் பிறகு அன்று இரவு சுமார் 07.30 மணியளவில் மனுதாரர் சம்மந்தமாக வந்திருந்த வழக்கறிஞரிடம், மனுதாரரை பசுபதிபாளையம் காவல் நிலைய கு.எண். 142/18 *U/S 457, 380* இ.த.ச வழக்கில் குற்றவாளியாக சேர்த்து விடுவதாகவும், விடுவிக்க வேண்டுமானால் ரூ.2 லட்சம் பணம் தரவேண்டும் எனவும், 1வது எதிரி நெப்போலியன் கேட்டுள்ளார். அதற்கு மனுதாரரின் வழக்கறிஞர் பணம் தரமுடியாது, கேஸ் வேண்டுமானால் போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு, அந்த தகவலை மனுதாரர் கோவிந்தனிடம் தெரிவித்துள்ளார். அதை தொடர்ந்து 1வது எதிரி நெப்போலியன் மனுதாரர் கோவிந்தனிடம் வந்து, திருட்டு வழக்கில் கைது செய்யாமல் இருக்க ரூ.2 லட்சம் தரவேண்டும் என்றும், இல்லையென்றால் கைது செய்துவிடுவேன் என்றும் கூறியதால், வேறு வழியில்லாமல் 02.05.2018 ஆம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் இருந்த மனுதாரர் கோவிந்தன் அவரின் மைத்துனர் சசிக்குமார் என்பவரை அழைத்து வினோத்திற்கு போன் செய்து வெங்கடேசனிடம் சென்று, பணம் ரூபாய் 2 லட்சம்

வாங்கி கொண்டு கரூர் பசுபதிபாளையம் காவல் நிலையத்திற்கு உடனே வரும்படி கூறியுள்ளார் என்பது சாட்சிகள் விசாரணையில் இருந்தும் தெரியவருகிறது.

மேலும் 02.05.2018 ஆம் தேதி இரவே மனுதாரர் கோவிந்தனின் சகோதரர் திரு.ராமசந்திரன் மற்றும் மைத்துனர் திரு.வினோத் ஆகியோர் வெங்கடேசனிடம் சென்று, ரூபாய் 2 லட்சம் பணத்தை வாங்கிக்கொண்டு கரூர் பசுபதிபாளையம் காவல் நிலையம் வந்தும், அந்த பணத்தை மேற்படி ராமச்சந்திரன் என்பவர் 1வது எதிரி உதவி ஆய்வாளர் நெப்போலியன் சொன்னதின் பேரில் 2வது எதிரி திரு.முருகானந்தம், மு.நி.கா.எண் 1852 என்பவரிடம் கொடுக்க மேற்படி எதிரி பணம் ரூபாய் 2 லட்சத்தை வாங்கி எண்ணிப்பார்த்து வைத்துக்கொண்டதும் சாட்சிகளின் விசாரணை மற்றும் ஆவணம் மூலம் தெரியவருகிறது.

எனவே குற்றச்சாட்டுகள் தொடர்பாக சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்தும், தொடர்புடைய ஆவணங்களை பார்வையிட்டு பரிசீலனை செய்ததில் இருந்தும் 1வது எதிரி திரு.நெப்போலியன் உதவி ஆய்வாளர் மற்றும் 2வது எதிரி திரு.முருகானந்தம் மு.நி.காவலர் எண்.1852 பசுபதிபாளையம் காவல் நிலையம், கரூர் மாவட்டம் ஆகியோர் தங்களது அரசு பதவியை துஷ்பிரயோகம் செய்து மனுதாரர் திரு.கோவிந்தனை குற்ற வழக்கில் சேர்த்து விடுவதாக சொல்லி ரூபாய் 2 லட்சத்தை லஞ்சமாக பெற்று கொண்டு சட்ட விரோத பணப்பயன் பெற்றுள்ளனர் என்பதற்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாக முதல் நிலை விசாரணையில் தெரியவருவதாலும், குற்ற வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்ய தகுந்த முகாந்திரம் உள்ளதாலும் திருச்சி சரக, காவல் துணை தலைவரின் ந.க.எண்.பி2/9953/2019 நாள் 25.09.2019, தேதியிட்ட செயல்முறை ஆணை பெற்று கரூர் ஊ.த.க பிரிவு கு.எண். 03/2020 ல் மேற்படி குற்ற அலுவலர்கள் இருவர் மீதும் பிரிவுகள் 7 மற்றும் 13(2) r/w 13(1)(d) of P.C Act 1988 படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

எனவே மேற்படி எதிரிகள் மீது காவல் ஆய்வாளர் M.ரேகா ஆகிய நான் கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 03/2020 பிரிவுகள் 7 மற்றும் 13(2) r/w 13(1)(d) of P.C Act 1988 படி இன்று 20.05.2020 ஆம் தேதி 12.15 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன்.

முதல் தகவல் அறிக்கையின் அசலை தலைமை குற்றவியல் நீதிதுறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், கரூர் அவர்களுக்கு, அனுப்பி வைத்தும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு

நகலை புலனாய்வுக்காக காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர் அவர்களுக்கும் அனுப்பி வைத்தேன்.

(M.ரேகா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கரூர்.
20.05.2020